# பள்ளிக்குச் சென்ற சிட்டுக்குருவிகள்

நாரா நாச்சியப்பன்




உலகத்தமிழ்க் கல்விக்கழகம்
www.worldtamilacademy.com

# உலகத்தமிழ்க் கல்விக்கழகம்

www.worldtamilacademy.com

| வரிசை எண் | பொருளடக்கம் | பக்கங்கள் |
| --- | --- | --- |
| 1 | பள்ளிக்குச் சென்ற சிட்டுக்குருவிகள். | 4-16 |
| 2 | விடுதலை பெற்ற சிட்டுக் குருவிகள். | 17-30 |
| 3 | தேவதையும் சிட்டுக் குருவிகளும். | 31-43 |
| 4 | சிட்டுக்குருவிப் பட்டாளம். | 44-51 |
| 5 | சக்தி பெற்ற சிட்டுக் குருவி. | 52-53 |



# 1.பள்ளிக்குச் சென்ற சிட்டுக் குருவிகள்

ஆழ்வார்ப்பேட்டையில் பேருந்து நிற்கும் இடத்தில் ஓர் அரசமரம் இருக்கிறது. அந்த மரக்கிளை ஒன்றில் கூடு கட்டிக் கொண்டு இரண்டு சிட்டுக் குருவிகள் இருந்தன. அந்தச் சிட்டுக் குருவிகளுக்கு இரண்டு சின்னச் சிட்டுக்கள் இருந்தன. அந்தச் சின்னச் சிட்டுகள் இரண்டும் அடித்த கொட்டத்திற்கு அளவே இல்லை.

ஒரு சிட்டுக்குஞ்சு ஒரு கிளையில் போய் ஒளிந்து கொள்ளும். இன்னொன்று அதைத் தேடிக்கொண்டு மரத்தைச் சுற்றிச் சுற்றிவரும். அது சோர்ந்து போய் ஒரு கிளையில் உட்கார வரும். அப்பொழுது பார்த்து முதல் குஞ்சு விருட்டென்று பறக்கும். உடனே அதை விரட்டிக்கொண்டு இரண்டாவது குஞ்சு புறப்படும்.

இரண்டும் சேர்ந்து கத்திக் கொண்டு பறந்தோடுவதைப் பார்த்தால் எதையோ விரட்டிப்பிடிக்கப் போவதைப்போல் இருக்கும். அந்த மரத்தில் இருக்கும் எல்லாப் பறவைகளுக்கும் அந்த இரண்டு சிட்டுக் குஞ்சுகளும் செல்லச் சிட்டுக்கள். அவை விளையாடுவதைப் பார்த்துக் கொண்டிருந்தாலே மற்ற பறவைகளுக்குப் பொழுது போய்விடும். இந்தச் சிட்டுக்களின் அம்மாச் சிட்டுக்கு ஒரே ஒரு ஆசை. இந்த இரண்டு சிட்டுகளையும் எங்காவது ஒரு நல்ல பள்ளிக் கூடத்தில் சேர்த்துப் படிக்க வைத்து விட வேண்டும் என்பதுதான் அதன் ஆசை.



நான்கு எழுத்துப் படித்துவிட்டால் அவை பேசும் அழகைப் பார்த்துக் கொண்டே இருக்கலாம். இப்படி ஒரு ஆசையை அந்த அம்மாச் சிட்டு மனத்தினுள் வளர்த்துக் கொண்டு இருந்தது. அம்மாவின் ஆசை தெரியாமல் அந்தச் சின்ன சிட்டுக்கள் இரண்டும் விளையாட்டிலேயே ஈடுபட்டிருந்தன.

ஒரு நாள் அந்த அம்மாச் சிட்டு ஆழ்வார் பேட்டையில் இருந்த ஆங்கிலப் பள்ளிக் கூடத்தின் பக்கமாகப் பறந்து சென்றது. வெள்ளை வெளேரென்று அழகாக இருந்த அந்தப் பள்ளி, கூடத்தின் எதிரில் ஆசிரியை ஒருத்தி மயில் போல் நின்று கொண்டிருந்தாள். அவளுக்கு எதிரே நூறு குழந்தைகள் அழகாகச் சீருடையணிந்து கொண்டு




சிட்டுக் குருவிகளைப் போல் நின்று கொண்டிருந்தன. அந்தச் சின்னக் குழந்தைகள் இரண்டு கைகளையும் ஒரே நேரத்தில் தலைக்குமேல் தூக்கியும், எதிரில் நீட்டியும், பக்கத்தில் விரித்தும், குனிந்தும், நிமிர்ந்தும் உடற்பயிற்சி செய்து கொண்டிருந்தார்கள்.



வரிசை வரிசையாக அவர்கள் நின்றதும், ஒரே மாதிரியாகக் கை, கால்களை அசைத்ததும், ஒரே வரிசையாகத் தொடர்வண்டி போல் ஓடியதும், பூக்கோலம் இட்டதுபோல் வட்டமாகவும், வளைந்தும் நின்றதும் மரத்தின் மேல் இருந்து பார்க்கும் பொழுது அழகழகாய் இருந்தது.

இந்ததப் பள்ளிக் கூடத்தில் எப்படியாவது தன் சிட்டுக் குஞ்சுகளைச் சேர்த்து விட வேண்டும் என்று அம்மாச் சிட்டுக்கு ஆசையாக இருந்தது. நாள் தோறும் அந்த அம்மாச் சிட்டு இரை தேடப் பள்ளிக் கூடத்தின் வழியாகப் பறந்து போகும் போதெல்லாம் இந்த ஆசை உண்டாகும். பள்ளிக் கூடத்தில் சேர்ப்பதென்றால், முதலில் பணம் கட்ட வேண்டும்; நன்கொடை கொடுக்க வேண்டும்; சீருடை தைக்க வேண்டும்; இதற்கெல்லாம் பணம் வேண்டுமே! அந்தச் சிட்டு எங்கே போகும்? ஒரு நாள் மாலை நேரம். தென்றல் சிலு சிலு வென்று வீசிக்கொண்டிருந்தது. கதிரவன் செம்மஞ்சள் நிறத்தோடு மேற்குத் திசையில் இறங்கிக் கொண்டிருந்தான். அப்பொழுது அந்தப் பள்ளிக்கூடத்துத் தலைமையாசிரியை எதிரில் உள்ள புல்வெளியில் நடந்து கொண்டிருந்தாள்.

அம்மாச் சிட்டு அந்த வழியாகப் பறந்து வந்தது. தலைமை ஆசிரியையைப் பார்த்தவுடன், மெல்லக் கீழே இறங்கியது. அவள் நடந்து வரும் போது எதிரில் புல்வெளியில் வந்து நின்று கொண்டது.



‘அம்மா அம்மா’ என்று கூப்பிட்டது சிட்டு.

தலைமையாசிரியை திரும்பிப் பார்த்தாள். யாரும் காணப்படவில்லை. மறுபடியும் சிட்டு ‘அம்மா, அம்மா’ என்று கூப்பிட்டது. தலைமை யாசிரியை எதிரில் பார்த்தாள்.

“அம்மா அம்மா, நான் தான் சிட்டுக் குருவி” என்று கூறிப் படபட வென்று இறக்கையை அடித்துக் கொண்டது அம்மாச் சிட்டு. தலைமையாசிரியை குனிந்து சிட்டைப் பார்த்தாள்.

“அம்மா வணக்கம்!” என்று கூறிக்கொண்டே சிட்டுக் குருவி அவள் காலில் வந்து விழுந்தது.

இந்தச் சிட்டு எதற்கு நம்மை வணங்குகிறது? என்று நினைத்தாள் தலைமை ஆசிரியை.

‘ஏ, சிட்டுக்குருவி, உனக்கு என்ன வேண்டும்?' என்று கேட்டாள் தலைமை ஆசிரியை. “அம்மா, நீங்கள் என்மீது கருணை வைக்க வேண்டும். என் குஞ்சுகள் இரண்டையும் தங்கள் பள்ளிக் கூடத்தில் சேர்த்துக் கொள்ள வேண்டும். தயவு செய்து தாங்கள் இதை மறுக்கக் கூடாது” என்று அம்மாச்சிட்டு கெஞ்சிக் கேட்டுக் கொண்டது.

தலைமை ஆசிரியைக்கு, அந்தச் சிட்டு மீது இரக்கம் ஏற்பட்டது.

அதனால், அந்தச் சிட்டு, கேட்டுக் கொண்டபடி அதன் குஞ்சுகளைத் தன் பள்ளிக் கூடத்தில் சேர்த்துக் கொள்ள ஒப்புக் கொண்டாள். பள்ளிக்கூடச் சம்பளமும், நன்கொடையும் கேட்கவில்லை.

“நாளைக் காலை ஒன்பது மணிக்கு உன் குஞ்சுகள் இரண்டையும் கூட்டிக் கொண்டுவா. மழலையர் வகுப்பில் சேர்த்துக் கொள்ளச் சொல்கிறேன். ஒழுங்காகப் பாடம் படித்தால் தொடர்ந்து படிக்கலாம். இல்லா விட்டால், பள்ளியிலிருந்து நீக்கி விடுவேன். எச்சரிக்கை” என்று கடுமையாகச் சொல்லி அனுப்பினாள்.

அம்மாச்சிட்டுக்கு, ஏற்பட்ட மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. ஆனந்தமாகச் சிறகடித்துப் பறந்து கொண்டே அரசமரத்தை நோக்கிச் சென்றது.

அங்கே, சின்னச்சிட்டுகள் இரண்டும், வழக்கம் போலப் பறந்து விளையாடிக் கொண்டிருந்தன. அம்மாவைக் கண்டதும், ஆசையோடு வந்து அருகில் உட்கார்ந்து கொண்டன.

"அம்மா, தின்ன என்னம்மா கொண்டு வந்தாய்?" என்று ஆவலாகக் கேட்டன. "இப்பொழுது, தீனி ஒன்றும் கொண்டு வரவில்லை. ஆனால் உங்களுக்குச் சீனி போல் இனிப்பான செய்தி ஒன்று கொண்டு வந்திருக்கிறேன்" என்று அம்மாச் சிட்டு கூறியது.

"என்ன! என்ன?" என்று இரண்டு சிட்டுகளும் குதித்துக் கொண்டு கேட்டன.

"உங்களை நாளைக்குப் பள்ளிக் கூடத்தில் சேர்த்து விடப் போகிறேன்.

தலைமை ஆசிரியை உங்களைச் சேர்த்துக் கொள்ள ஒப்புக் கொண்டு விட்டார்கள்" என்று அம்மா கூறியது. இந்தச் செய்தியைக் கேட்டதும், இரண்டு சிட்டுக்களும் குதித்துக் குதித்துப் பறந்தன.

"நாங்கள் படிக்கப் போகிறோம்!" என்று கத்திக் கொண்டே அரசமரத்தைச் சுற்றிச் சுற்றி வந்தன.

அந்த மரத்தில் குடியிருந்த பறவைகளுக்கெல்லாம் இது புதிய செய்தியாய் இருந்தது. படித்தால் பெரிய நிலைக்கு வரலாம். இன்பமாக வாழலாம். அறிஞர்கள் பாராட்டுவார்கள். இப்படிப்பட்ட வாய்ப்பு அந்தச் சிட்டுக் குஞ்சுகளுக்குக் கிடைத்ததைக் கண்டு அரசமரத்துப் பறவைகளெல்லாம் வாழ்த்துக் கூறின.

அம்மாச்சிட்டு, கவுடியா மடத்தின் எதிரில் இருந்த ஒரு தையற் கடைக்குப் பறந்து சென்றது. தையல் பொறியின் மேல் போய் உட்கார்ந்து கொண்டு அந்தத் தையற்கலைஞரைப் பார்த்து,

“அண்ணே! அண்ணே! தையற்கார அண்ணே, என் சிட்டுக் குஞ்சுகள் இரண்டும் நாளைக்குப் பள்ளிக் கூடத்திற்குப் போகின்றன. இரண்டு குஞ்சுகளுக்கும், இரண்டு சீருடைகள் தைத்துக் கொடுங்கள் அண்ணே” என்று கேட்டது.

தையற்காரரும் அதற்கு உடனே இரண்டு சீருடைகள் தைத்துக் கொடுத்தார். மறுநாள் காலை இரண்டு சிட்டுக் குருவிகளும் அழகான அந்தச் சீருடைகளை அணிந்து கொண்டு பள்ளிக்கூடத்துக்குப் புறப்பட்டன.

சீருடையோடு அவை தத்தித் தத்தி நடந்து சென்ற காட்சி அழகைக் கண்டு அரச மரத்துப் பறவைகளெல்லாம் மகிழ்ச்சி கொண்டன. எல்லாப் பறவைகளின் வாழ்த்துக்களோடு அவை பள்ளிக் கூடத்திற்குப் போய்ச் சேர்ந்தன.

மழலையர் வகுப்பில் அவற்றை உட்கார வைத்து விட்டு, அம்மாச் சிட்டு அரசமரத்திற்குத் திரும்பியது. பிறகு இரை தேடச் சென்று தன் குஞ்சுகளுக்குப் பள்ளிக் கூடத்தில் பகல் உணவு கொண்டு போய்க் கொடுத்தது. மாலை நான்கு மணிக்கு மீண்டும் சென்று கூட்டுக்குக் கூட்டிக் கொண்டு வந்தது.

வகுப்பில் இருந்த பிள்ளைகளுக்கு இந்த சிட்டுக்குருவிகள் படிக்க வந்ததிலிருந்தே ஒரே கொண்டாட்டம். ஆசிரியை, வராத நேரங்களில் இந்தக் குருவிகளோடு எல்லாக் குழந்தைகளும் விளையாடின.

வர, வரப் பிள்ளைகளின் கவனம் பாடத்தில் செல்லாமல், சிட்டுக் குருவிகளோடு விளையாடுவதிலேயே காலம் சென்றது. இதனால் அந்த மாதத் தேர்வில் எல்லாப் பிள்ளைகளுக்கும் மதிப்பெண் குறைந்து விட்டது.

தலைமை ஆசிரியை வகுப்பறைக்கு வந்து அந்த வகுப்பு ஆசிரியையைக் கோபித்துக் கொண்டாள்.




அந்த வகுப்பு ஆசிரியை, "குழந்தைகளின் மதிப்பெண் குறைந்ததற்குக் காரணம், இந்தச் சிட்டுக் குருவிகள் தான்!" என்று கூறினாள்.

அதனால், தலைமை ஆசிரியை, அம்மாச் சிட்டைக் கூப்பிட்டுக் கண்டித்தாள். “அடுத்த மாதமும் இதே மாதிரி மதிப்பெண் குறைந்தால், இரண்டு சிட்டுக் குஞ்சுகளையும் பள்ளிக் கூடத்தை விட்டு நிறுத்தி விடுவேன்” என்று திட்டமாகச் சொல்லி விட்டாள்.

அன்று மாலை, பள்ளி விட்டுத் திரும்பிய சிட்டுக் குஞ்சுகளுக்கு நல்ல திட்டுக் கிடைத்தது. அம்மாச் சிட்டு மிகச் சினத்தோடு பேசியது. “இனிமேல் விளையாட்டைக் குறைத்துக் கொள்கிறோம்” என்று அந்தச் சிட்டுக் குஞ்சுகள் உறுதியளித்தன. ஒருவாரம் கழித்து ஒரு நாள் தலைமையாசிரியை எங்கோபேருந்தில் போய் வந்தாள். பேருந்தை விட்டுக் கீழே இறங்கி நடந்து சென்றாள்.

அப்போது, ஒரு முரடன் மிக விரைவாக எதிரில் நடந்து வந்தான். திடுதிப் பென்று, தலைமை ஆசிரியையின் கைப் பையைப் பறித்துக் கொண்டு ஓடினான்.

“திருடன் திருடன்” என்று தலைமையாசிரியை கத்தினாள்.

உடனே கூட்டம் கூடியது. தெருவில் சென்று கொண்டிருந்தவர்கள் அந்தத் திருடனை விரட்டிக் கொண்டு ஓடினார்கள்.



ஒருவன் திருடனை நெருங்கிப் பிடிக்கப் போனான். அப்போது அந்தத் திருடன் ஒரு கத்தியை எடுத்து நீட்டவே, அவன் பயந்து நின்று விட்டான். திருடன் ஓடிக் கொண்டிருந்தான். ஓடியவர்கள் செய்வதறியாமல் நின்று விட்டனர். இதையெல்லாம் பார்த்துக் கொண்டிருந்தன அந்த இளஞ் சிட்டுக்கள். விருட்டென்று பாய்ந்தன. இரண்டும் பறந்து சென்று திருடனின் முகத்தில் மாறி மாறிக் கொத்தின. அவன் அவற்றின் திடீர்த் தாக்குதலை எதிர்க்க முடியாது கீழே விழுந்தான்.



அவன் கையில் இருந்த கத்தி நழுவிப் போய்த் தொலைவில் விழுந்தது. தயங்கி நின்ற கூட்டத்தினர் ஓடி வந்து திருடனைப் பிடித்துக் கொண்டனர். அவனை இழுத்துச் சென்று காவல் நிலையத்தில் விட்டனர். தலைமையாசிரியையின் பணப்பை மீட்கப் பட்டது.



அவரிடம் திருப்பிக் கொடுக்கப் பட்டது. தலைமை ஆசிரியை அந்த இளஞ்சிட்டுகள் இரண்டையும் நன்றியோடு நினைத்துக் கொண்டு பள்ளிக்குச் சென்றாள். பள்ளியில் மற்ற ஆசிரியைகளிடமும் அந்தச் சிட்டுக்கள் செய்த உதவியை எடுத்துக் கூறினாள். அன்று முதல் எல்லாரும் அந்தச் சிட்டுக்களை அன்போடு நடத்தினார்கள்.

ஒரு நாள் பள்ளிச் சிறுமி ஒருத்தி தெரு வழியாக நடந்து சென்று கொண்டிருந்தாள். யாரோ சிலர் ஒரு உந்தில் வந்து இறங்கினார்கள். அந்தச் சிறுமியை வழிமறித்துத் தூக்கி உந்திற்குள் போட்டார்கள்.

அவள் கதறிக் கதறி அழுதாள்; உந்து புறப்பட்டு விட்டது. அரச மரத்தில் விளையாடிக் கொண்டிருந்த சிட்டுக்கள் இதைப் பார்த்தன. உடனே, விருட்டென்று பறந்தன. அந்த உந்து ஓட்டுபவனை மாறி மாறி முகத்தில் கொத்தின. அவன் பயந்து உந்தை நிறுத்தி விட்டான். உள்ளே சிறுமி கதறிக் கதறி அழுது கொண்டிருந்தாள். அவளை அடித்து அவள் அணிந்திருந்த சங்கிலி, தோடு, மோதிரம், ஆகியவற்றை இரண்டுபேர் கழற்றிக் கொண்டிருந்தார்கள். இரண்டு சிட்டுக்களும் அவர்கள் முகத்தைக் கொத்தின. படபடவென்று சிறகடித்து அவர்கள் கண்ணில் தூசி பறக்கச் செய்தன.

அதற்குள், சிறுமியின் கூக்குரல் கேட்டு ஓடி வந்த பொதுமக்கள் உந்தில் வந்த அந்தத் திருடர்களை அடித்து உதைத்து அனுப்பினார்கள். மறுநாள், பள்ளியில் அந்தச் சிறுமி நடந்ததைக் கூற எல்லாப் பிள்ளைகளும் சிட்டுக்களைப் பாராட்டினர்.

சிட்டுக்களும் இது போல் எல்லாருக்கும் நல்ல உதவிகளை அவ்வப்போது செய்து வந்தன. பள்ளியில் விளையாடுவதையும், குறும்பு செய்வதையும் விட்டு விட்டன. அந்த மாதத்தேர்வில் எல்லாக் குழந்தைகளும் நிறைய மதிப்பெண் வாங்கினார்கள். சிட்டுக் குருவிகளும் நன்றாகத் தேர்வு எழுதி நிறைய மதிப்பெண் வாங்கின.

ஒவ்வொரு மாதமும் அவை மதிப்பெண் அறிக்கை கொண்டுவரும்போது மரத்தில் உள்ள எல்லாப் பறவைகளுக்கும் காட்டி அம்மாச் சிட்டு மகிழ்ச்சி கொள்ளும்.

‘என் குஞ்சுகளைப் பெரிய மருத்துவர் ஆக்கப் போகிறேன்’ என்று அது அடிக்கடி சொல்லும். சிட்டுக்களும் அம்மாவின் ஆசையை நிறைவேற்றும் நல்ல கண்மணிகளாக விளங்கின. அந்தச் சிட்டுக்களைப் போல் சுறுசுறுப்பாகவும் பகைவருக்கு அஞ்சாத வீரமுள்ளவர்களாகவும் பாடத்தை ஒழுங்காகப் படிக்கும் பாப்பாக்களாகவும் நாம் இருப்போம்.



# ௨. விடுதலைபெற்ற சிட்டுக்குருவிகள்

இராயபுரம் மாதா கோயில் பக்கத்தில் சாலையோரத்தில் ஒரு பெரிய வேப்ப மரம் இருக்கிறது.

அந்த வேப்பமரத்தின் அடியில் ஒரு கிழவன் உட்கார்ந்திருக்கிறான். அவனுக்கு எதிரில் ஒரு சிறிய பாய் விரித்திருக்கிறது. அந்தப் பாயின் மீது சில அட்டைகள் வரிசை வரிசையாகச் சரிந்து கிடக்கின்றன. அந்த அட்டைகளுக்கு எதிரில் ஒரு மரக் கூண்டு இருக்கிறது. மரக் கூண்டுக்குள் ஒரு சிட்டுக் குருவியிருக்கிறது.

மரக் கூண்டுக்கு ஒரு கதவு. அந்தக் கதவைத் தூக்கினால் சிட்டுக்குருவி வெளியே வரும்.

“கண்ணா, கண்ணா, ஒரு சீட்டை எடு. ஐயாவுக்கு நல்ல காலம் சொல்லுகிற ஒரு சீட்டை எடு” என்று அந்தக் கிழவன் சொல்லுகிறான். சிட்டுக்குருவி வரிசையாக சரிந்து கிடக்கும் அட்டையில் ஒன்றைத் தன் மூக்கினால் கொத்தி இழுக்கிறது. கிழவன் அந்தச் சீட்டை எடுத்து விரிக்கிறான். அதில் பலன் அச்சடித்திருக்கிறது. வாசிக்கிறான் விளக்கம் சொல்லுகிறான். தன் எதிர்காலம் நன்றாக இருக்கிறது என்ற மகிழ்ச்சியோடு எதிரில் இருக்கிறவர் இருபத்தைந்து காசு ஒன்றைக் கொடுக்கிறார்.



இப்படி இருபத்தைந்து இருபத்தைந்து காசுகளாக ஒரு நாளைக்குப் பத்து அல்லது பதினைந்து ரூபாய் வரை வரும்படி வருகிறது.



கிழவன் குடும்பச் செலவுக்கு இது ஓரளவு போதுமான வரும்படியாய் இருக்கிறது. வாழ்க்கை அவனுக்கு நிம்மதியாகக் கழிகிறது.

ஆனால் அந்தச் சிட்டு வானவெளியில் உரிமையோடு பறந்து திரியும் வாழ்க்கையை இழந்து விட்டது. கூட்டுக்குள்ளிருந்து வெளி யில் பார்க்கும்போது தன்னைப் போன்ற சிட்டுக்கள் களிப்போடு பறந்து திரியும் காட்சியைக் காணுகிறது. தான் மட்டும் எவ்வித உரிமையும் இல்லாமல் அடிமையாய் அந்தக் கூட்டுக்குள் அடைபட்டுக் கிடப்பது அதற்குப் பெரிய வேதனையாய் இருந்தது. கிழவன் போடும் நெல்மணிகளைத் தின்று விட்டு, அவன் கூப்பிடும் போது ஏதாவது அட்டையைக் கொத்தி எடுத்துக் கொடுப்பது அதன் வேலையாய் இருந்தது.

ஒவ்வொரு முறை இருபத்தைந்து காசு வாங்கும் போதும், அந்தக் கிழவன் கடவுளுக்கு நன்றி சொல்லுவான். சிட்டுக்குருவியின் துன்பத்தைப் பற்றி அந்தக் கிழவனும் நினைப்பதில்லை; அவன் நன்றிக்குப் பாத்திரமான அந்தக் கடவுளும் நினைப்பதில்லை.

தங்கள் எதிர் காலத்தைத் தெரிந்து கொண்டு போகும் எந்த மனிதர்களும் நினைத்துப் பார்ப்பதில்லை.

அந்தச் சிட்டுக்குருவி ஒருநாள் கடற்கரையோரத்தில் யாரோ சிதறிவிட்டுச் சென்ற சுண்டல் கடலையைக் கொத்திக் கொண்டிருந்தது. அப்போது அத்துடன் பத்துப் பதினைந்து சிட்டுக் குருவிகள் இருந்தன. அத்தனை குருவிகளும் ஆளுக்கொரு கடலையைக் கொத்தித் தின்று கொண்டிருந்தன.



அப்போது இந்தக் கிழவன், சற்றுத் தொலைவிலிருந்து கவண் வீசியிருக்கிறான். கவண் உருண்டை அந்தச் சிட்டுக் குருவியின் மீது பொட்டென்று வந்து அடித்தது. அந்தச் சிட்டுக் குருவி அந்த வலுவான அடியைத் தாங்க மாட்டாமல் தரையில் மயங்கி விழுந்தது. மற்ற சிட்டுக் குருவிகள் பறந்தோடி விட்டன. அந்தக் கிழவன் ஓடி வந்து, மயங்கிக் கிடந்த சிட்டுக் குருவியைத் தூக்கிக் கொண்டான். வீட்டுக்குக் கொண்டு சென்றதும் அதன் இறக்கைகளைக் கத்தரித்து விட்டான். காலில் ஒரு நூலைக் கட்டி சன்னலில் கட்டி விட்டான்.

கூட்டிலிருந்து வெளியே வந்து அட்டையைக் கொத்தப் பழக்கிக் கொடுத்தான். ஆறு மாதமாகச் சிட்டுக் குருவி வேதனையோடு இந்த வேலையைச் செய்து வருகிறது. அதன் எதிர் காலமே இருண்டு தோன்றியது.

இந்தக் கிழவனிடமிருந்து எப்படித் தப்புவது என்று அதற்குப் புரியவே இல்லை. சில முறை வெளியே வந்த போது, அது பறக்க முயன்றது. இறக்கை கத்திரித்திருந்ததால் அதனால் பறக்க முடியவில்லை. சில சமயம் தத்தித் தத்தி ஓட முயன்றது.



கிழவன், “என் பிழைப்பில் மண்ணைப் போட்டு விட்டு ஓடப் பார்க்கிறாயா?” என்று கூறிப் பிடித்துக் கூட்டுக்குள் போட்டுவிட்டான்.

தப்ப வழி தெரியாமல் அந்தச் சின்னச் சிட்டு தத்தளித்துக் கொண்டிருந்தது. கிழவன் அதன் உணர்ச்சிகளைப் புரிந்து கொள்ளவில்லை. தன் நண்பர்களிடம் “கடவுள் இந்தச் சிட்டுக் குருவி மூலம் எனக்குச் சோறு போடுகிறார்' என்று பெருமையாகச் சொல்லுவான். இதைக் கேட்கும் போது சிட்டுக் குருவி அவனை வாயாரத் திட்டும். ஆனால் அது கிழவனுக்குப் புரியாது.

ஒரு நாள் பகல் நேரம் வெயில் கொளுத்திக் கொண்டிருந்தது. சோதிடம் பார்க்க யாரும் வரவில்லை. கிழவன் வீட்டிலிருந்து கொண்டு வந்த கட்டுச் சோற்றைச் சாப்பிட்டு, வேப்ப மரத்தடியில் சாய்ந்து தூங்கிக் கொண்டிருந்தான்.

கிழவன் நன்றாகக் குறட்டை விட்டுக் கொண்டிருந்தான். சிட்டுக் குருவி தன் வாழ்க்கையை எண்ணிக் கவலைப்பட்டுக் கொண்டிருந்தது.

ஒரு சிறுபையன் அந்த வழியாக வந்தான். அவனுக்கு நெடுநாளாகச் சோதிடம் பார்க்க வேண்டும் என்று ஆசை. ஆனால் காசு கிடையாது. அவன் கிழவனைப் பார்த்தான். கிழவன் அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தான். சிறுவன் மரத்தடியை நோக்கிப் பூனை போல் மெதுவாக நடந்து வந்தான்.

ஓசைப் படாமல் கூட்டுக் கதவைத் திறந்தான். சிட்டுக்குருவி வெளியில் வந்தது. அட்டை ஒன்றைக் கொத்தி எடுத்தது. சிறுவன் அந்த அட்டையை எடுத்தான். பிரித்துப் பார்த்தான்.

படித்துப் பார்ப்பதற்குள் கிழவன் விழித்துக் கொண்டால் என்ன செய்வது என்று நினைத்தான். அட்டையைத் தூக்கிக்கொண்டு ஓசைப் படாமல் நடந்து சென்றான். சிறிது தொலைவு சென்றபின் ஓடி விட்டான்.

சிட்டுக் குருவி மீண்டும் கூண்டுக்குள் சென்றது. திரும்பிப் பார்த்தது. திறந்த கதவு திறந்தபடி இருந்தது. கிழவன் தூங்கிக் கொண்டிருந்தான்.

தப்பி ஓட இந்த நேரம் தான் நல்ல நேரம் என்று தோன்றியது. இது போல் வேறொரு நேரம் கிடைக்காது என்று தோன்றியது. சட்டென்று வெளியில் வந்தது.

பறக்க முயன்றது. இறக்கை கத்திரித்திருந்ததால் பறக்க முடியவில்லை. மெல்லத் தத்தித் தத்தி நடந்தது.


சிறிது தொலை சென்று திரும்பிப் பார்த்தது. கிழவன் குறட்டை விட்டுக் கொண்டிருந்தான்.

மேலும் நடந்தது. தத்தித்தத்திச் சென்றது, கிழவன் கண்ணுக்குத் தென்படாத தொலைவு சென்றுவிட்டது. ஒரு தோட்டத்துக்குள் நுழைந்தது.

‘அப்பா! விடுதலையாகி விட்டோம்’ என்று தலை நிமிர்ந்தது.

ஒரு பூனை அதையே உற்றுப் பார்த்தது. பயமாய் இருந்தது.

சிட்டுக் குருவி சுற்றும் முற்றும் பார்த்தது. சிறிது தொலைவில் ஒரு கிணறு இருந்தது. அதற்குப் பக்கத்தில் ஒரு குடம் கவிழ்ந்து கிடந்தது.



சட்டென்று தத்தித் தத்திச் சென்று அந்தக் குடத்திற்குள் நுழைந்து கொண்டது. பூனை பாய்ந்து வந்தது. அது பிடிப்பதற்கு முன் குருவி குடத்திற்குள் நுழைந்துவிட்டது. பூனை பாய்ந்து வந்தது. அது பிடிப்பதற்கு முன் குருவி குடத்திற்குள் நுழைந்துவிட்டது.

பூனை குடத்தை உருட்டிவிட்டது. குருவி வெளியில் வரவில்லை.

நெடுநேரம் உருட்டி உருட்டிப் பார்த்து விட்டு அலுத்துப் போய்ப் பூனை சென்று விட்டது.

குடத்தின் வாய்ப்பகுதிக்கு வந்து வெளியே எட்டிப் பார்த்தது. நான்கு புறமும் தலையைத் திருப்பிப் பார்த்தது. தொலை தூரம் வரை கூர்ந்து பார்த்தது. பூனை அந்தத் தோட்டத்தை விட்டே போய்விட்டது என்று உறுதிப் படுத்திக் கொண்ட பிறகு வெளியே வந்தது.

படுபாவிக் கிழவன் பறக்க முடியாமல் செய்து விட்டானே என்று திட்டிக் கொண்டே தத்தித் தத்தி நடந்து சென்றது. யாரும் தன்னைத் தொடரவில்லை என்று ஒவ்வொரு தடவையும் சுற்றிச் சுற்றிப் பார்த்துக் கொண்டு இராயபுரம் கடற்கரைக்கு வந்தது.

கடற்கரையோரமாக ஒரு மாந்தோப்பு இருக்கிறது. அதற்குள் நுழைந்துவிட்டால், தன் இனத்தோடு சேர்ந்து விடலாம் என்ற நினைப்போடு அது சென்றது.

எப்படியோ மாந்தோப்புக்குள் நுழைந்து விட்டது. அங்கே அதன் நண்பர்களான பல சிட்டுக்குருவிகள் பறந்துவந்து அதை வரவேற்றன.

“கண்ணா, இவ்வளவு நாள் எங்கே போயிருந்தாய்?” என்று அவை கேட்டன.

தன் வரலாற்றை அது கூறியது:

எல்லாக் குருவிகளும் அதற்காக இரக்கப்பட்டன.

அது பறக்க முடியாததால், அதற்குத் தரையை ஒட்டினாற்போல் இருந்த ஒரு செடியின் கிளையில் கூடுகட்டிக் கொடுத்தன.

அது செடியின் வாதுகளைப் பற்றிக் கொண்டே அது மெல்ல மேலேறிக் கூட்டுக்குச் சென்று விடும். இரவெல்லாம் கூட்டில் அமைதியாகத் தூங்கும். பகலெல்லாம் தோப்பிற்குள் அங்கும் இங்கும் நடந்து சுற்றும். கீழே கிடக்கும் ஏதாவது உணவுப் பொருள்களைக் கொத்தித் தின்னும் மற்ற குருவிகளோடு ஊர்க்கதைகளைப் பேசிக் கொண்டிருக்கும். அதன் பொழுது இன்பமாகக் கழிந்தது.

அது விடுதலையாகி ஒரு மாதம் இருக்கும். ஒரு நாள் மாந்தோப்பின் நடுவில் பல சிட்டுக் குருவிகள் கூடி இரை கொத்திக் கொண்டிருந்தன.

அப்போது அங்கே ஒரு நல்ல பாம்பு தரையில் ஊர்ந்து வந்தது.

அதைக் கண்டவுடன் எல்லாச் சிட்டுகளும் பறந்து சென்று மரக்கிளைகளில் உட்கார்ந்து கொண்டன. இந்தச் சிட்டு மட்டும் தரையில் நின்றது.

பாம்பு அதை நோக்கி நகர்ந்தது. அது தத்தித் தத்தி ஓடியது.

மரக்கிளையில் இருந்த சிட்டுகள் "பற, பற" என்று கத்தின.

இந்தச் சிட்டு பறக்க முயன்றது. அதற்குப் பறக்க வந்து விட்டது.

வியப்புடன் அது இறக்கை விரித்துப் பறந்தது. மரக்கிளையொன்றில் போய் அமர்ந்து கொண்டது.

அந்த ஒரு மாத காலத்தில் வெட்டி விட்ட அதன் இறக்கை வளர்ந்துவிட்டிருந்தது. இதையறியாத அந்தச் சிட்டு தன்னால் பறக்க முடியாதென்று நினைத்துக் கொண்டிருந்தது.

பாம்புக்குப் பயந்து பறக்க முயன்றபோது அது உண்மையிலேயே பறந்து விட்டது.

"எனக்குப் பறக்க வந்து விட்டது!" என்று அது கூக்குரல் இட்டது.

இனிமேல் அது யாருக்கும் பயப்படத் தேவையில்லை; ஏதாவது ஆபத்து என்றால் அதனால் உடனே பறக்க முடியும்; மரத்தின் மேல் ஏறிக் கொள்ள முடியும்.

நன்றாகப் பறக்க முடிந்த பிறகு ஒரு நாள் அந்தச் சிட்டுக் குருவி இராயபுரம் மாதா கோயில் பக்கம் பறந்து சென்றது. அந்த வேப்ப மரத்தின் அருகில் சென்றது.

அங்கே கிழவன் சோதிடம் பார்த்துக் கொண்டிருந்தான். அதன் கூட்டில் வேறொரு சிட்டுக் குருவியிருந்தது. அது சோதிட அட்டையைக் கொத்தி எடுத்துக் கொடுத்தது. கிழவன் படித்துக் காட்டி இருபத்தைந்து காசு வாங்கிக் கொண்டிருந்தான்.

இந்தக் காட்சியைக் கண்டதும் அந்தச் சிட்டுக் குருவிக்கு அழுகை அழுகையாக வந்தது. இவ்வளவு நாளும் அது தனக்காக மட்டுமே அழுதது. இப்போது அது தன் இனத்துக்காக அழுதது.

மாந்தோப்புக்குப் திரும்பி வந்து மற்ற சிட்டுக் குருவிகளிடம் இதைப்பற்றிச் சொல்லி வருந்தியது. மற்ற குருவிகளும் வருத்தப்பட்டன.

ஆனால், நம்மால் என்ன செய்ய முடியும்? என்று சொல்லி விட்டு அவை தத்தம் வேலையைப் பார்க்கச் சென்று விட்டன. ஆனால் அந்தச் சிட்டுக் குருவிக்கு இதே கவலையாக இருந்தது.

உரிமையோடு வாழப் பிறந்த குருவிகள் இப்படி அடிமைப்படுவது என்பது அதனால் பொறுக்க முடியாத துயரமாய் இருந்தது.

இதே வருத்தத்தில் அது நாளுக்குநாள் உடல் மெலிந்து வந்தது. அதன் நண்பர்களான மற்ற சிட்டுக்கள் எவ்வளவோ சொல்லியும் அதன் மனக் கவலை மாறவில்லை.

ஒருநாள் கடற்கரையில் ஒரு சிறு பெண், தேங்காய் மாங்காய் சுண்டல் பொட்டலத்தைக் கைதவறிப் போட்டு விட்டாள்.

மண்ணில் விழுந்ததை எடுக்க வேண்டாம் என்று அதன் பெற்றோர் அதற்கு வேறு பொட்டலம் வாங்கிக் கொடுத்தார்கள். அவர்கள் அந்த இடத்தை விட்டு அகன்றபின் சிட்டுக் குருவிகள் அந்தச் சுண்டல்களைக் கொத்தித் தின்றன.

கவலையோடு இருந்த அந்தச் சிட்டுக் குருவி ஒன்றும் தின்னப் பிடிக்காமல் தொலைவில் நின்று கொண்டிருந்தது. அந்தப் பொட்டலம் கட்டியிருந்ததாள் காற்றில் பறந்து வந்தது. அந்தத் தாள் கவலையோடு நின்ற சிட்டுக் குருவியின் முன் பறந்து சென்று விழுந்தது.

சிட்டுக்குருவி அந்தத் தாளை உற்று நோக்கியது. அந்தத் தாளில் கொட்டை எழுத்தில் ஒரு செய்தி வெளியாகியிருந்தது. சிட்டுக் குருவி அதைப் படித்தது.

“நேற்றுக் கூடிய சட்டமன்றக் கூட்டத்தில் பல புதிய சட்டங்கள் நிறைவேறின. அவற்றில் சிறப்பான ஒன்று, சோதிடம் சொல்வது குற்றம் என்ற சட்டமாகும். இந்தச் சட்டத்தின் படி சோதிடம் பார்க்கும் மூடப்பழக்கம் ஒழிந்து விடும் என்பதில் ஐயமில்லை.”

இந்தச் செய்தியைப் படித்த சிட்டுக் குருவிக்கு ஏற்பட்ட மகிழ்ச்சிக்கு அளவேயில்லை. அதன் முகத்தில் புதுப் பொலிவு ஏற்பட்டது. இறக்கைகளில் புதுத்தென்பு ஏற்பட்டது. எண்ணத்தில் புதிய களி வெள்ளம் பொங்கியது.

அன்று முதல் அது நன்றாகச் சாப்பிட்டது. “அரசு வாழ்க! சட்டமன்றம் வாழ்க!” என்று அது வாழ்த்தியது.

# 3.தேவதையும் சிட்டுக்குருவிகளும்.


திருவல்லிக்கேணி பாரதி சாலையில் ஓர் அரச மரம் இருக்கிறது. அந்த அரச மரத்தின் அடியில் ஒரு பிள்ளையார் இருக்கிறது. அந்த அரச மரத்தின் கிளை ஒன்றில் இரண்டு சிட்டுக்குருவிகள் வாழ்ந்து வந்தன.

அந்த இரண்டு சிட்டுக் குருவிகளும் என்றும் இணைபிரியாமல் இருந்தன. ஒன்று ஆண். இன்னொன்று பெண். இரண்டும் எங்கு சென்றாலும் ஒன்றாகத்தான் செல்லும். எது கிடைத்தாலும் ஒன்றாகத்தான் தின்னும். என்ன செய்தாலும் ஒன்றாகத்தான் செய்யும்.

பாரதி சாலையில் நடந்து செல்லும்போது வானத்தை நிமிர்ந்து பார்த்தால் மேலே அந்தச் சிட்டுக் குருவிகள் இரண்டும் ஒன்றாகப் பறந்து செல்வதைப் பார்க்கலாம். சாலையின் ஓரத்தில் நின்று பார்க்க வேண்டும். நடுவில் நின்று பார்த்தால் பார்க்கிறவர்கள் மேல் பேருந்து ஏறிவிடும்.

நாள்தோறும் அவை கடற்கரைக்குச் சென்று வரும். கடற்கரையில் அவற்றிற்கு நிறையத் தீனி கிடைப்பதால், மாலையில் அங்கு போய் விடும். கடற்கரையில் கூடும் மக்கள் கொறிக்கும் போது தவறிவிழும் தின்பண்டங்கள் நம் சிட்டுக்குருவிகளுக்குத் தீனிப் பொருள்கள்.

ஒரு நாள் அந்தச் சிட்டுக் குருவிகள் இரண்டும் கடற்கரையில் தீனி பொறுக்கித் தின்று விட்டுத் தங்கள் கூட்டுக்குத் திரும்பிக் கொண்டிருந்தன. அப்போது அவற்றின் எதிரில் ஓர் அழகான பெண் வந்து கொண்டிருந்தாள். அவள் நீலச் சேலை அணிந்திருந்தாள். அவளுடைய கூந்தல் காற்றில் விரிந்து ஆடிக் கொண்டிருந்தது. அவள் கண்களில் அருள் ஒளி தோன்றியது.



சிரித்த முகத்தோடு அன்பு வடிவமாக வந்து கொண்டிருந்த அந்தப்பெண்மணியைக் கண்ட சிட்டுக் குருவிகள் அவள் எதிரில் பறந்து வந்தன. அவள் தன் இரு கைகளையும் நீட்டினாள். சிட்டுக் குருவிகள் இரண்டும் அவளுடைய இரண்டு உள்ளங்கைகளிலும் போய் உட்கார்ந்தன.

இரண்டு சிட்டுக் குருவிகளுக்கும் அந்தப் பெண்மணி அன்பு முத்தம் கொடுத்தாள். "குழந்தைகளே உங்களுக்கு என்ன வேண்டும்?" என்று கேட்டாள் அந்தப் பெண் மணி.

"அம்மா தாங்கள் யார்?" என்று ஆண் குருவி கேட்டது.

"குழந்தைகளே, நான் தான் கடல் தேவதை. உங்களுக்கு என்ன வேண்டும், கேளுங்கள் நான் தருகிறேன்" என்றாள் அந்தப் பெண் மணி. சிட்டுக் குருவிகள் அவளை நிமிர்ந்து பார்த்தன.

"தாயே! எங்களுக்கு எந்தக் குறையும் இல்லை நாங்கள் மனநிறைவோடு இருக்கிறோம். தங்களிடம் என்ன கேட்பதென்றே தெரியவில்லை" என்று கூறின.

"நல்ல குழந்தைகள்! இருந்தாலும் நான் உங்களுக்கு ஒரு நல்ல மொழி சொல்லுகிறேன். அதைக் கேட்டு நடங்கள். உங்கள் வாழ்வு என்றும் பயனுள்ளதாக இருக்கும். அதனால் மிக்க மகிழ்ச்சியைக் காண்பீர்கள்" என்று கூறினாள் கடல் தேவதை.

'சொல்லுங்கள் அம்மா!' என்று இரண்டு சிட்டுக் குருவிகளும் பணிவோடு கேட்டன.

“குழந்தைகளே, எல்லாரிடமும் அன்பு செலுத்துங்கள். நல்லவர்களுக்கு உதவி செய்யுங்கள்” என்று கூறினாள் கடல் தேவதை.

‘அப்படியே செய்கிறோம் அம்மா! உங்களை மறுபடி எங்கே பார்க்கலாம்?’ என்று சிட்டுக் குருவிகள் கேட்டன.

‘குழந்தைகளே, நீங்கள் என்னைப் பார்க்க வேண்டும் என்று நினைத்தால், கடற்கரைக்குப் பறந்து வாருங்கள். கரையோரத்தில் நின்று கொண்டு ‘அம்மா!’ என்று அழைத்தால் நான் ஓடோடி வருவேன்’ என்று கூறினாள் கடல் தேவதை. குருவிகள் தேவதையிடம், போய் வருகிறோம் என்று சொல்லிக் கொண்டு தங்கள் கூட்டுக்குத் திரும்பின.

அந்தச் சிட்டுக்குருவிகள் இரண்டும் தூக்கம் வரும்வரை தேவதையைப் பற்றியே பேசிக்கொண்டிருந்தன. அவளுடைய அழகைப் பற்றியும், இனிய மொழிகளைப் பற்றியும், அன்பான பார்வையைப்பற்றியும், அவள் சொன்ன நல்ல கருத்தைப் பற்றியும் பேசிக்கொண்டே தூங்கின. தூக்கத்தில் கூட அந்த அழகான தேவதை நேரில் வந்து அவற்றோடு அன்பாகப்பேசிக் கொண்டிருப்பது போல் கனவு கண்டன. அந்த நல்ல தேவதையின் நட்புக் கிடைத்தது பற்றி அவை மகிழ்ச்சியடைந்தன.

ஒரு நாள் இரண்டு சிட்டுக் குருவிகளும் கடற்கரையில் தீனி பொறுக்கித் தின்று கொண்டிருந்தன. திடீரென்று மழை பெய்யத் தொடங்கியது. உடனே, கடற்கரையில் காற்று வாங்க வந்திருந்த அனைவரும் எழுந்து ஓடினர்.

சாலைக்கு வந்து பேருந்துகளில் ஏறக் காத்திருந்தனர். சிறிதுநேரத்தில் ஒரு பேருந்து வந்து நின்றது. மக்கள் முட்டி மோதிக்கொண்டு பேருந்தில் ஏற முயன்றனர்.

பேருந்தில் ஏறிக் கொண்டிருந்த ஒரு சிறுமியின் கழுத்தில் இருந்த சங்கிலியை கூட்டத்தில் கலந்திருந்த ஒரு திருடன் அறுத்துக் கொண்டு ஓடினான். ‘ஐயோ, சங்கிலி சங்கிலி!’ என்று அந்தச் சிறுமி கதறினாள். உடனே பேருந்து நின்றது. பேருந்தில் படிக்கட்டில் நின்ற பலர் திருடனை விரட்டிக் கொண்டு ஓடினர். திருடன் மிகவேகமாக ஓடினான். யாராலும் பிடிக்க முடியாது போல் இருந்தது.

மழைத் தூறல் நின்றுவிட்டது. திருடனைத் துரத்தியவர்களில் சிலர் அங்கங்கே கால் ஓய்ந்து நின்று விட்டனர். ஐந்து பேர் மட்டும் எப்படியாவது பிடிப்பதென்ற உறுதியில் ஓடிக் கொண்டிருந்தனர்.

மழை நின்றதும் சிட்டுக் குருவிகள் பறந்தன். ஓடிக் கொண்டிருக்கும் திருடன் மீது பாய்ந்தன. அவன் முகத்தின் மீது பாய்ந்து பாய்ந்து கொத்தின. அவன் ஓட முடியாமல் தடுமாறினான்.




அப்போது பின்னால் விரட்டிக் கொண்டு வந்தவர்கள் நெருங்கி வந்து அவனைப் பிடித்து விட்டனர்.

திருடன் பிடிப்பட்டதைக் கண்டு மற்றவர்களும் ஓடி வந்தனர். கூட்டம் கூடிவிட்டது. எல்லோரும் திருடனை உதைத்து அவன் அறுத்து வந்த தங்கச் சங்கிலியை அந்தச் சிறுமிக்குத் திருப்பிக் கொடுத்தனர்.

சிட்டுக் குருவிகள் மகிழ்ச்சியுடன் தங்கள் கூட்டுக்குத் திரும்பின. 'இன்று நாம் அந்தச் சிறுமிக்கு உதவி செய்தோம். இது தெரிந்தால் கடல் தேவதை மிகுந்த மகிழ்ச்சியடைவாள்' என்று அவை பேசிக் கொண்டன. மறுநாள் வழக்கம் போல் அவை கடற்கரைக்குச் சென்றன. தீனி பொறுக்கித் தின்று கொண்டிருந்தன.

அப்போது அவற்றின் மீது ஒரு வலை வந்துவிழுந்தது. எதிர்பாராத இந்த ஆபத்தைக் கண்டு அவை திடுக்குற்றன. வலையை இழுத்துச் சுருக்கிக் கொண்டிருந்த மனிதனைத் திரும்பிப் பார்த்தன.

முதல் நாள் சங்கிலி திருடி அகப்பட்டு அடி வாங்கிய திருடன் தான் அவன். 'என்னைக் காட்டிக் கொடுத்தீர்களா? இன்று பாருங்கள். உங்களை என் பூனைக்கு விருந்து வைக்கிறேன்!' என்று பல்லைக் கடித்துக்கொண்டே பேசினான் அந்த மனிதன். சிட்டுக் குருவிகளுக்கு என்ன செய்வதென்றே புரியவில்லை. அந்தக் கொடிய திருடனிடமிருந்து எப்படித் தப்பிப் பிழைப்பதென்றும் புரியவில்லை. ஒன்றையொன்று பார்த்து விழித்தன.

கடற்கரை ஓரத்தில் ஒரு குடிசையை நோக்கி அந்த மனிதன் விரைந்தான். அந்தக் குடிசையின் முன்னே ஒரு முரட்டுப் பூனை உட்கார்ந்திருந்தது. திருடன் கையில் இருந்த வலைக்குள் சிட்டுக் குருவிகளைப் பார்த்தவுடன் அந்தப் பூனை உடனே கடித்துத் தின்னப் பாய்ந்து வந்தது.

‘பூனைக் கண்ணா! கொஞ்சம் பொறுமையாயிரு. வலையை விட்டு எடுத்து விடுகிறேன். பிறகு நீ லபக் கென்று பிடித்துக் கொள்ளலாம்’ என்று கூறிச் சிட்டுக் குருவி ஒன்றை வெளியில் எடுத்தான், திருடன்.

பூனை அதைக் கௌவிப் பிடிக்கப் பாய்ந்தது.

வலைக்குள் இருந்த மற்றொரு சிட்டுக் குருவி ‘அம்மா...!’ என்று கதறியது. அவ்வளவு தான்! பூனையின் தலையில் ஓர் அடி விழுந்தது. அந்தத் திருடன் தலையில் ஓர் அடி விழுந்தது. அந்தத் திருடனும் பூனையும் மயங்கி விழுந்தார்கள்.

வலைக்குள் இருந்த சிட்டுக் குருவியை ஒரு பெண்ணின் அழகான கை வெளியில் எடுத்து விட்டது. ‘அன்புக் குழந்தைகளே! நீங்கள் பறந்து செல்லுங்கள்!’ என்று அந்தச் சிட்டுக் குருவிகளை இரண்டு கைகள் தூக்கி வானை நோக்கி வீசின.

சிட்டுக் குருவிகள் பறந்து கொண்டே கீழே நோக்கின. கடல் தேவதை கனிவான முகத்தோடு அவற்றைப் பார்த்துக் கை வீசிக் கொண்டிருந்தாள்.

‘அம்மா காப்பாற்றினாள்; கடலம்மா காப்பாற்றினாள்’ என்று பாடிக் கொண்டே அவை தங்கள் அரசமரத்துக் கூட்டுக்குப் பறந்து சென்றன.

மற்ற குருவிகளிடம் தாங்கள் பட்ட பாட்டை எடுத்துக் கூறின. அந்த முரட்டுத் திருடனின் அரக்கத் தனத்தைப் பற்றியும், கடலம்மாவின் அன்பு உதவியைப் பற்றியும் அவை விரிவாக எடுத்துக் கூறின.

அந்த மரத்தில் இருந்த மற்ற குருவிகளுக்கெல்லாம் கடலம்மாவைப் பார்க்க வேண்டும் போலிருந்தது. ‘எங்களுக்கெல்லாம் கடலம்மாவைக் காட்டுவீர்களா?’ என்று அவை ஆவலோடு கேட்டன.

‘உறுதியாக! கடலம்மா மிக அன்புள்ளவள் நம் எல்லாரையும் ஒன்றாகப் பார்த்தால் மிக மகிழ்ச்சியடைவாள்’ என்று அந்தச் சின்னச் சிட்டுக் குருவிகள் கூறின.

மறுநாளே அரச மரத்தில் இருந்த எல்லாக் குருவிகளும் கடற்கரைக்குப் புறப்பட்டுச் சென்றன.

வான வீதியில் அவை கூட்டமாய்ப் பறந்து செல்வதைக் கண்ட மற்ற மரங்களிலும், வீடுகளிலும், குடியிருந்த சிட்டுக் குருவிகள் அனைத்தும் இவற்றைத் தொடர்ந்து பறந்தன. குருவிகள் கூட்டமாகப் பறந்து செல்வதைக் கண்ட, காகங்களும், புறாக்களும், மைனாக்களும், மரங்கொத்திகளும் கூட்டம் கூட்டமாக அவற்றைப் பின்பற்றிப் பறந்து சென்றன.

பாரதிசாலை முழுவதும் வானவெளியில் ஒரே பறவைக் கூட்டங்களாகக் காட்சியளித்தது.

அதைப் பார்த்து ஒரு சிறுவன்,

காக்கை குருவி எங்கள் சாதி - நல்ல
கடலும் மலையும் எங்கள் கூட்டம்
நோக்கும் திசையெல்லாம்
நாமன்றி வேறில்லை
நோக்க நோக்கக் களியாட்டம்
காக்கை குருவி எங்கள் சாதி

என்று பாடினான்.

எங்கே கடலம்மா?

எங்கே கடலம்மா?

என்று எல்லாம் சேர்ந்து கேட்கத் தொடங்கின.

சாலையோரத்தில் நின்ற சில சிறுவர்கள் மகிழ்ச்சியாகவும் ஒற்றுமையாகவும் கூடி வந்த பறவைகளைக் கலைக்கும்படியான ஒரு செயல் செய்தார்கள்.

சாலை ஓரத்தில் கிடந்த கற்களை எடுத்துக் கூடி நின்ற பறவைகளின் மீது குறிபார்த்து அடித்தார்கள். இதனால் பல பறவைகள் காயப்பட்டன.

சிறுவர்கள் மேலும் மேலும் கற்களைப் பொறுக்கியடித்தார்கள். மகிழ்ச்சியாகக் கூடியிருந்த பறவைக் கூட்டத்தின் இடையில் வேதனையும் துன்பமும் பரவியது. சில காகங்கள் அந்தச் சிறுவர்களைக் கொத்துவதற்காகச் சாலை நோக்கிப் பறந்தன. இதற்கிடையே சின்னச்சிட்டுக்கள் இரண்டும் ‘அம்மா! கடலம்மா!’ என்று கத்தின.

இந்தக் குரல் கேட்டவுடனே, கடலம்மா அவற்றின் கண்முன்னே தோன்றினாள். வானத்தில் அழகாக இறக்கை விரித்துப் பறந்தாள்.

ஒவ்வொரு பறவைக் கூட்டத்தையும் பார்த்து வாழ்த்து மொழிகளைக் கூறினாள். மேலே அங்கும் இங்கும் பறந்து கொண்டே இரண்டு கைகளாலும் நவதானிய மணிகளை எங்கும் கொட்டினாள்.

பறவைக் கூட்டங்களுக்கு ஏற்பட்ட மகிழ்ச்சியை இவ்வளவு அவ்வளவு என்று சொல்ல முடியாது.

எல்லாப் பறவைகளும் கடலம்மாவை வணங்கின. அவள் போட்ட தானிய மணிகளைத் தேடிப் பொறுக்கித் தின்றன. மகிழ்ச்சியுடன் அவ்வப்போது அவளை நிமிர்ந்து பார்த்தன. கடலம்மா எல்லாப் பறவைகளையும் வாழ்த்தினாள். சிறுவர்களை நோக்கிப் பறந்தாள்.

‘சிறுவர்களே, காக்கை குருவியெல்லாம் உங்கள் அன்புக்குரிய பறவைகள். அவைகளை நீங்கள் ஆதரித்து வளர்க்க வேண்டும். கல்லால் அடிப்பதோ, தொல்லை கொடுப்பதோ கூடாது. அவற்றோடு சேர்ந்து விளையாடலாம். துன்புறுத்தக் கூடாது. உலகில் எல்லாரும் மகிழ்ச்சியாக இருக்க இதுவே வழி’ என்று கடலம்மா கூறினாள்.

உடனே சிறுவர்கள் தெரியாமல் செய்து விட்டோம் தாயே. மன்னிக்க வேண்டும்.

இனிமேல் எல்லாரிடமும் அன்பாக இருப்போம்’ என்று கூறினார்கள். கடலம்மா ஒவ்வொரு சிறுவனுக்கும் முத்தம் கொடுத்தாள்.

பறவைக்கூட்டங்களுக்கெல்லாம், என்றும் பசியில்லாத அளவு நிறைய தானிய மணிகள் கிடைக்குமாறு அருள் மொழி கூறினாள். அரசமரத்துச் சிட்டுக்களைத் தன் கையில் தூக்கி வைத்துக் கொண்டு அன்பு முத்தம் கொடுத்தாள்.

மீண்டும் ஒரு முறை எல்லாப் பறவைகளுக்கும் வாழ்த்துக் கூறி விட்டுக் கடலம்மா மறைந்து விட்டாள். பறவைக் குலங்கள் எல்லாம் கடலம்மாவின் அருளை வியந்து மகிழ்ந்தன.

அரசமரத்துச் சிட்டுக்குருவிகள், கடலம்மாவின் செல்லச் சிட்டுக்களாக இருந்ததால், எல்லாப் பறவைகளும் அவற்றிடம் மிகுந்த அன்பு பாராட்டின.



# 4.சிட்டுக் குருவிப் பட்டாளம்

பாராண்டபுரம் என்று ஓர் ஊர் இருந்தது. அந்த ஊரில் ஒரு மன்னர் இருந்தார். அந்த மன்னருக்கு ஒரு மகள் இருந்தாள். அவள் ஒரே மகள். எனவே பாராண்டபுர மன்னருக்கு அவள் செல்ல மகள்.

அந்தச் செல்ல மகள் விளையாடுவதற்காக மன்னர் ஒரு சோலையை உண்டாக்கினார். ஊருக்குப் பக்கத்தில் உள்ள காட்டில் இந்தச் சோலையமைந்தது. இதில் நிழல் தரும் பழ மரங்களும், மணந்தரும் பூஞ்செடிகளும், கொடிகளும் வளர்க்கச் செய்தார்.

எல்லாம் வளர்ந்து ஓர் அழகான பூஞ்சோலையாக மாறிய பின், தன் மகளை அதாவது இளவரசியை அங்கே அழைத்துச் செல்லும் முன் பூஞ்சோலையைப் பார்த்து வரப் புறப்பட்டார் மன்னர். அவருடைய அமைச்சர்கள் நான்கு பேரும், மெய்காப்பாளரும் உடன் சென்றனர். அந்தச் சோலை மிக அழகாக இருந்தது. சோலையருகில் செல்லும்போதே பூக்களின் மணம் மூக்கைத் துளைத்தது. மன்னர் சோலைக்குள்ளே நடந்து சென்றார்.

கக்கக்கக்கக்

குக்குக்குக்குக்

கக்குக்குக்கக்

குக்கக்கக்குக்



என்று சோலை முழுவதும் சிட்டுக் குருவிகள் ஒலியெழுப்பிக் கொண்டிருந்தன. ‘இது என்ன ஓசை?’ என்று கேட்டார் மன்னர் சற்றுச் சினத்துடனேயே! ‘இது சிட்டுக் குருவிகளின் ஓசை!’ என்று ஓர் அமைச்சர் பதில் அளித்தார். ‘சிட்டுக் குருவிகள் இங்கே என்ன செய்கின்றன?’ என்று கேட்டார் மன்னர்.

‘குருவிகள் பறந்து விளையாடுகின்றன’ என்று அந்த அமைச்சர் பதில் அளித்தார். மன்னருக்குச் சினம் பொங்கிவந்தது. ‘இளவரசி விளையாடுவதற்காக அமைத்த சோலையில் சிட்டுக்குருவிகள் எப்படி விளையாடலாம்? கூப்பிடு காவல் வீரர்களை’ என்று பொரிந்து தள்ளினார் மன்னர். காவல் வீரர்கள் ஓடோடி வந்தனர்.

‘மாமன்னர் வாழ்க!’ என்று கூறி வணக்கம் இட்டு நின்றனர்.

‘இந்தச் சோலை இளவரசி விளையாடுவதற்காக அமைக்கப்பட்டது. இங்கு சிட்டுக் குருவிகளை விளையாட விட்டது தவறு. இன்றே அவற்றை யெல்லாம் இங்கிருந்து அப்புறப் படுத்துங்கள். இது என் கட்டளை’ என்று ஆணையிட்டார் மன்னர். உடனே காவல் வீரர்கள், சிட்டுக் குருவிகளை விரட்டத் தொடங்கினர். சிலர் மரங்களில் ஏறி அவற்றின் கூடுகளைக் கலைத்து விட்டனர்.

சில வீரர்கள் சிட்டுக் குருவிகளின் மேல் கல்லை விட்டெறிந்தனர். சிலர் கவண் வில்லினால் களிமண் உருண்டைகளை யடித்தனர். சிலர் வில்லை வளைத்து அம்பெய்தனர். இதில் சில சிட்டுக் குருவிகள் அடிபட்டு விழுந்து இறந்தன.

இந்த வேட்டை நடந்து கொண்டிருக்கும் போதே ஒரு சிட்டுக் குருவி வான வெளியில் பறந்து சென்றது. நேரே கொல்லி மலைக்குச் சென்றது. அங்கு ஓர் அரச மரத்தில் வீற்றிருந்த சிட்டுக் குருவியரசனிடம் நடந்த நிகழ்ச்சிகளைக் கூறியது. உடனே அந்த சிட்டுக் குருவி அரசன் படை திரட்டிக் கொண்டு பாராண்டபுரத்திற்குப் பறந்து சென்றது.

பாராண்டபுரத்து அரண்மனையைச் சுற்றிலும் சிட்டுக் குருவிகளின் படையெடுப்பு. அரண்மனை வேலைக்காரர்களால் வேலை செய்ய முடிய வில்லை. தோட்ட வேலை செய்பவன் முகத்தில் நான்கு சிட்டுக் குருவிகள் மோதின. அவன் கோபத்தோடு கல்லெடுக்கக் கையை நீட்டும் போது கையில் நான்கு சிட்டுக் குருவிகள் கொத்தின. அவன் நிமிரும் போது கன்னத்தில் கொத்தின. குனியும் போது தலையில் கொத்தின. இப்படி ஒவ்வொரு அரண்மனை வேலைக்காரரைச் சுற்றிலும் நூற்றுக்கணக்கான குருவிகள் சூழ்ந்து கொண்டு தொல்லை கொடுத்தன.

தோட்டக்காரர்கள் செடிகளுக்கு நீர் ஊற்ற முடியவில்லை. சேடிகள் பூப்பறிக்க முடியவில்லை. சமையல்காரர்கள் அடுக்களையில் வேலை செய்ய முடியவில்லை. காவல் வீரர்கள் பாராக்கொடுக்க முடியவில்லை.

அமைச்சர்கள் அரண்மனைக்குள் நுழையவே முடியவில்லை அரண்மனை முழுவதும் ஒரே கூச்சலும் கூக்குரலும் அழுகுரலும் நிறைந்தன. அரண் மனையைச் சுற்றிலும் சிட்டுக் குருவிகளின் ஆங்காரமான போர்க்குரல். பாராண்டபுரத்து மன்னர், இந்த நிலையைப் பற்றிக் கேட்டவுடன், என்ன நடக்கிறது என்று பார்ப்பதற்காக உப்பரிகைக்கு வந்தார்.

உப்பரிகைத் தளத்தில் அரசர் வரவை எதிர் பார்த்துக் கொண்டு ஆயிரம் சிட்டுக் குருவிகள் காத்திருந்தன. மன்னர் தலையைக் கண்டவுடன் ஒரேயடியாக அவர் மீது பாயத் துடித்துக் கொண்டு நின்றன. ஆனால் மன்னர் முன்னேற்பாடாக இரும்புக் கவசம் அணிந்து வந்தார். முகத்துக்கு நேரே கண்ணாடி அமைந்த தலைக் கவசத்துடன் அவர் வெளியே வந்தார்.

உப்பரிகையின் மேலிருந்து அரண்மனையின் முன்புறத்தை நோக்கினார். எங்கு பார்த்தாலும் சிட்டுக்குருவிகள். இலட்சக்கணக்கான சிட்டுக் குருவிகள்.

அரசர் அந்தச் சிட்டுக் குருவிகளின் கூட்டத்தை நோக்கிப் பேசினார். ‘சிட்டுக் குருவிகளே, நீங்கள் ஏன் இப்படிக்கூட்டமாகப் படையெடுத்து வந்திருக்கிறீர்கள். உங்களுக்கு என்ன குறை? தண்ணீர் கிடைக்கவில்லையா? தானியம் கிடைக்கவில்லையா? ஏன் இப்படிக் கூட்டமாக வந்து அரண்மனையைச் சூழ்ந்து கொண்டிருக்கிறீர்கள்?’ என்று பாராண்டபுர மன்னர் கேட்டார்.

‘எங்கள் தலைவன் வருகிறார்! சிட்டரசன் வருகிறார்! உங்களுக்கு அவர் பதில் சொல்லுவார்!’ என்று ஐந்தாறு சிட்டுக் குருவிகள் கத்தின. அப்போது தொலைவில் வானவெளியில் ஒரு பூம்பல்லக்கு மிதந்து வருவது தெரிந்தது. பாராண்டபுர மன்னர் நிமிர்ந்து பார்த்தார். கொடிகளால் பின்னிய ஒரு பூம்பல்லக்கு வானில் மிதந்து வருவதுபோல் தோன்றியது. உண்மையில் அது வானில் தானாக மிதந்து வரவில்லை. ஐம்பது சிட்டுக் குருவிகள் தங்கள் அலகுகளால் பற்றிக் கொண்டு ஒரே சீராகப் பறந்து வந்தன.

சாமந்திப் பூக்களால் ஆகிய அந்த மஞ்சள் பல்லக்கில் ரோஜாப் பூவினால் ஒரு உயர்ந்த பீடம் அமைக்கப் பட்டிருந்தது. அந்தப் பீடத்தின் மீது மிகுந்த பெருமிதத்தோடு ஒரு சிட்டுக் குருவி உட்கார்ந்திருந்தது.

அதன் சிறிய கண்களின் கூரிய பார்வையால், அது உலகத்தையே அடக்கியாளக் கூடிய தோற்றத்தைப் பெற்றிருந்தது. இலட்சக் கணக்கான சிட்டுக் குருவிகளுக்குத் தலைவனாய் இருக்க கூடிய அதன் தகுதிக்கு அந்தப் பார்வையே சான்றாக அமைந்திருந்தது.

சிட்டரசனாகிய அந்தச் சிட்டுக் குருவி ஏறி வந்த பூம்பல்லக்கு உப்பரிகையின் மீது வந்து இறங்கியது. அது இறங்கிக் கொண்டிருந்த போதே, சுற்றிலும் இருந்த சிட்டுக் குருவிகள்.

“சிட்டரசன் வாழ்க! சிட்டரசன் வாழ்க” என்று முழக்கம் எழுப்பின. பூம்பல்லக்கு உப்பரிகைத் தளத்தின் மீது இறங்கியவுடன், சிட்டரசன் மெல்லக் கீழே இறங்கியது. பாராண்டபுர அரசன் எதிரில் வந்து நின்றது. ‘மன்னர் பிரானே’ வணக்கம்’ என்று தலை வணங்கியது.

ஒரு சிட்டுக் குருவிக்கு எவ்வளவு பெருமை என்று மனத்துக்குள் அதைத்திட்டினாலும், அதை மறைத்துக் கொண்டு பாராண்டபுர மன்னர் அமைதியாகவே பேசினார். ‘சிட்டரசனே, இது எல்லாம் என்ன? எதற்காக எல்லாச் சிட்டுக்களையும் அனுப்பி என் அரண்மனையை அல்லோல கல்லோலப் படுத்துகிறாய்?

எனக்கும் உனக்கும் என்ன பகை?’ என்று மன்னர் கேட்டார்.

‘மன்னர் பெருமானே, இந்த உலகத்தில் கடவுள் மனிதர்களை மட்டும் படைக்க வில்லை. விலங்குகளையும், நீர் வாழ்வனவற்றையும் பறவைகளையும் படைத்திருக்கிறார். இதிலிருந்து என்ன தெரிகிறது?’’ என்று சிட்டரசன் கேட்டது.

‘ஏ, சிட்டுக் குருவியே, நீ என்ன பள்ளிக் கூடம் நடத்துகிறாயா? இது என்ன பாடம் நடக்கிற வகுப்பா?’ என்று கேட்டார் மன்னர். ‘அரசே, நீங்கள் பதிலைச் சொல்லுங்கள். இந்த உலகம் மனிதர்களுக்கு மட்டும் தான் சொந்தமா?’ என்று கேட்டது சிட்டு.

‘இல்லை, இல்லை. எல்லாருக்கும் தான் சொந்தம். உயிர்கள் அனைத்தும் வாழ்வதற்காகத்தான் இறைவன் இந்த உலகில் எல்லா ரையும் படைத்திருக்கிறான். எல்லாரும் வாழப் பிறந்தவர்களே? இதில் ஐயமேயில்லை என்றார் மன்னர். ‘மன்னர் பெருமானே, தாங்கள் தங்கள் மகள் விளையாடுவதற்காக ஒரு சோலை உருவாக்கினீர்களாம். அதில் வாழும் எங்கள் சிட்டுக் குருவிகளை விரட்டியடிக்கச் சொன்னீர்களாம். உங்கள் மகள் விளையாடும் சோலையில் எங்கள் குருவிக் குஞ்சுகள் விளையாடக் கூடாதென்று சொன்னீர்களாம்.

உங்கள் ஆட்கள் எங்கள் கூடுகளையெல்லாம் கலைத்து விட்டார்களாம். இதற்கு நீதி கேட்கவே நாங்கள் இங்கு கூடி வந்துள்ளோம்' என்று சிட்டரசன் கூறியது.

பாராண்டபுரத்து மன்னர் ஊமையானார். சிறிது நேரம் கழித்து அவர் சிட்டரசனைப் பார்த்து, 'நான் நீதி தவறி விட்டேன். மன்னன் என்ற ஆங்காரத்தால் மனந்தெளியாமல் இந்தக் கட்டளையைப் பிறப்பித்துவிட்டேன். சிட்டரசனே, இனிமேல் நான் மட்டும் அல்ல, என் ஆட்சியில் உள்ள யாரும் இவ்வாறு நடந்து கொள்ளாமல் பார்த்துக் கொள்கிறேன். இறைவன் படைப்பில் எல்லா உயிர்களும் ஒரு மாதிரி தான் என்ற உண்மையை நான் மறக்க மாட்டேன். நீயும், உன் குருவிக் குலமும் என்னை மன்னிக்க வேண்டுகிறேன்.

என் அன்பின் அடையாளமாக, இன்று அரண்மனைக் களஞ்சியத்தில் உள்ள தானியங்களை உங்களுக்கு வாரி வழங்க விரும்புகிறேன். எல்லோரும் விருந்துண்டு மகிழ்ச்சியாக உங்கள் கூடுகளுக்குத் திரும்ப வேண்டுகிறேன்!' என்றார். உடனே எல்லாச் சிட்டுகளும் 'பாராண்ட புரமன்னர் வாழ்க!' என்று கத்தின. தானிய விருந்து உண்ட பின் தத்தம் கூடுகளுக்கு மகிழ்ச்சியோடு பறந்து சென்றன. சிட்டரசனும் தன் பூம்பல்லக்கில் ஏறிக்கொல்லி மலைக்குத் திரும்பியது.

# 5.சக்தி பெற்ற சிட்டுக் குருவி

ஒரு புல்வெளி. பசு ஒன்று மேய்ந்து கொண்டிருந்தது. அந்த வழியாக ஒரு சிட்டுக் குருவி பறந்து சென்றது.



சிறிது நேரம் பசுவின் முதுகில் உட்கார்ந்து இளைப்பாறிச் செல்லலாம் என்று சிட்டுக் குருவி நினைத்தது. உடனே கீழே இறங்கிப் பசுவின் முதுகில் குந்தியது.

முதுகில் ஏதோ குத்துவது போல் உணர்ந்த பசுவாலைத் தூக்கி அடித்தது. நல்ல அடி!

சிட்டுக் குருவி சுருண்டு விழுந்தது.

“ஐயோ அப்பா!” என்று அலறியது.

பசு திரும்பிப் பார்த்தது.

“நீயா, பாவம்! பார்க்காமல் அடித்து விட்டேன்” என்று சொல்லிக் கொண்டே நாக்கால் தடவிக் கொடுத்தது. சிட்டுக் குருவியின் மேல் அதன் நாக்குப் பட்டதும், நாக்கில் இருந்த எச்சில் அதன்மேல் ஒட்டிக் கொண்டது. அதனால் அதன் சிறகுகள் நனைந்து ஒட்டிக் கொண்டன. சிறகுகள் ஒட்டிக் கொண்டதால் சிட்டுக் குருவியால் பறக்க முடியவில்லை.

சிட்டுக் குருவியைக் கௌவுவதற்கு அந்த வழியாகச் சென்ற ஒரு பூனை பாய்ந்து வந்தது. பூனையைப் பார்த்தவுடனே சிட்டுக்கு எங்கிருந்துதான் பலம் வந்ததோ! விருட்டென்று பாய்ந்து பறந்தது. ஒட்டியிருந்த சிறகுகள் விரிந்து கொண்டன.

சிட்டுக் குருவி தப்பிப் பிழைத்தது.












உலகத்தமிழ்க் கல்விக்கழகம்

www.worldtamilacademy.com